31-07-2025.
O.S.No.366/2022

வா. சா. 1 அருணாச்சலம் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

2 முதல் 4, 7, 8, 9 12, 14 மற்றும் 19ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-

என் தகப்பனார் பெயர் சுந்தரராஜன். சுந்தரராஜனின் தகப்பனார் அருணாச்சலம் பிள்ளை. அருணாச்சலம் பிள்ளை, அலங்காரம் பிள்ளை, கருப்பையா பிள்ளை ஆகிய 3 பேரும் சகோதரர்கள் என்றால் சரிதான். 1954ம் வருடம் விருப்பனம்பலம் அருணாச்சலம்பிள்ளைக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து தீர்ப்பானது என்றால் சரிதான். மேற்படி அ.வ.எண்.128/1954 வழக்கில் மொத்தம் 27 ஏக்கர் 93 செண்ட் அதில் மேற்கு பக்கம் பாதி பாகம் விருப்பன் அம்பலத்திற்கும் கிழக்குப் பக்கம் பாதி பாகம் அருணாச்சலம்பிள்ளைக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். அலங்காரம் பிள்ளைக்கு 3 மகன்கள். 1. துரைச்சாமி, 2.சோமசுந்தரம் பிள்ளை, 3. அருணாச்சலம்பிள்ளை. நான் அலங்காரம் பிள்ளையின் சகோதரர் அருணாச்சலம் பிள்ளையின் வாரிசு ஆவேன். கருப்பையாபிள்ளைக்கு 3 வாரிசுகள். 1. ராமலிங்கம்பிள்ளை, 2.ராமசாமி பிள்ளை 3. லட்சுமிணபிள்ளை ஆகியோர். மேற்படி மூவரின் வாரிசுகளும் 19.02.1966ம் தேதி மூன்று பாகமாக சொத்துக்களைப் பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்றால் சரிதான். என்னுடைய சகோதரர் 18ம் பிரதிவாதி சித்தார்த்தன். 19ம் பிரதிவாதி 18ம் பிரதிவாதியின் மகன். என் சகோதரி அன்பரசு பாகம் கேட்டு திண்டுக்கல்லில் ஒரு வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 18, 19ம் பிரதிவாதிகள் அவர்களது பாகத்தை 2021ம் வருடத்தில் 13ம் பிரதிவாதி பாத்திமாவுக்கு கிரையம்

செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். நாங்கள் 1966ம் வருடத்தில் பாகம் பிரித்துக்கொண்டபோது அருணாச்சலம்பிள்ளைக்கு மேற்குபக்கமும், அலங்காரம்பிள்ளைக்கு நடுப்பக்கமும், கருப்பையா பிள்ளைக்கு கிழக்குபக்கமும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. பாகம் பிரித்த பின்னர் எங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தில் நான் தென்னந்தோப்பு வைத்துள்ளேன் என்றும் மற்றவர்கள் தரிசாக வைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. சொத்துக்கள் அனைத்தும் விவசாய நிலங்களா என்றால் தென்னந்தோப்பு உள்ள இடங்கள். அதை நாங்கள் குத்தகைக்கு விட்டு அனுபவித்து வருகிறோம். ஆரம்பத்திலிருந்தே அந்த நிலங்கள் விவசாய நிலங்களாக உள்ளது என்றால் சரியல்ல. தென்னந்தோப்பும் விவசாய நிலம் என்றால் சரியல்ல. அருணாச்சலம்பிள்ளை வகையறாவுக்கு ஒதுக்கப்பட்ட 13 ஏக்கர் 90.1/2 செண்ட் நிலத்தில் ரோட்டிற்காக 1 ஏ 6 செண்ட் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். உண்ணாமலை என்பது எனது சகோதரி. அவர் பெயர் அன்பரசு. வீட்டில் உண்ணாமலை எனக்கூப்பிடுவோம். அவர் அனைத்துச் சொத்துக்களிலும் அவரது பாகத்தைகேட்டு பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். எங்களில் 4 சகோதரர்களுக்கும் தனித்தனியாக வீடு உள்ளது என்றால் சரியல்ல. 2 வீடு எனக்கும், ஒரு வீடு மற்ற மூன்று சகோதரர்களுக்கும் பொதுவாக உள்ளது. அருணாச்சலம் பிள்ளை காலத்திலேயே அலங்காரம் பிள்ளைக்கும் கருப்பையா பிள்ளைக்கும் வீடுகளை தனித்தனியாக பிரித்துக்கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். 13ம் பிரதிவாதி பாத்திமாவுக்கும் 1ம் பிரதிவாதி ஜமீலாவுக்கும் 1 ஏக்கர் ரூ.12 லட்சத்திற்கு மற்ற பிரதிவாதிகள் விற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல. 17, 18

பிரதிவாதிகளும் மேற்படி பிரதிவாதிகளுக்கு சொத்தை விற்றுள்ளார்கள் என்றும், நானும் ஒப்புக்கொண்டு கடைசியில் பத்திரம் பதிவதற்கு நான் போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. தற்போது ஒரு ஏக்கர் 30 லட்சம் போகிறதா என்றால் எனக்குத் தெரியாது. என் சகோதரிகள் அனைவரும் பாகத்திற்கு வரக்கூடாது என்பதற்காக தாவா வழக்கை பொய்யாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதே போல் விவசாய நிலத்தில் Presumption right கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

1 மற்றும் 13ம் பிரதிவாதிகள் தரப்பு வழக்குரைஞரின் வேண்டுகோளின்பேரில் குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.07.31 16:18:12 +0530

Principal District Judge,
Dindigul.